ஹப்புத்தளை நகர சபை - 2023
------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ஹப்புத்தளை நகர சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாடுகள் தொடர்பான கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (அதிகாரம் 255) 181(1) ஆம் உப பிரிவினதும், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் ஹப்புத்தளை நகர சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நகர சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நகர சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நகர சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நகர சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

**1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் நகர சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

**1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஏதிர்வரும் ஆண்டுக்குரிய சேவை உடன்படிக்கைக் கட்டணம் மற்றும் காப்புறுதிக் கட்டணம் ரூபா 272,100 மீளாய்வாண்டின் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | எதிர்வரும் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும்போது சரி செய்யப்படும். | சரியாக கணக்குகள் தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது கிடைக்கப்பெற்ற முத்திரைக் கட்டணம் ரூபா 472,875 கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (இ) | வாடகைக்கு வழங்குவதற்காக பயன்படுத்தப்பட்ட 36 GI குழாய்களின் பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | சொத்துக்களை மெய்மையாய்வு செய்து சரியான பெறுமதி புத்தகங்களுக்கு கொண்டு வருவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | - மேற்படி - |
| (ஈ) | மீளாய்வாண்டின் போது பல்வேறு நிர்மாணங்களுக்காக செலவிடப்பட்ட ரூபா 1,140,588 கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரிசெய்யப்படும். | சரியாக கணக்குகள் தயாரிக்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (உ) நதர சபைக்கு எதிராக நீதிமன்றத்தில் இரண்டு வழக்குகள் காணப்படுவதுடன் 02 வழக்குககள் தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படவில்லை. | எதிர்வரும் ஆண்டுகளின் போது உரிய வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்படும். | - மேற்படி - |

### 1.6.2 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கூட்டுப்பெறுமதி ரூபா 105,483,051 ஆன காணியும் கட்டிடமும், இயந்திரமும் இயந்திர உபரணங்களும், தளபாடமும் பொருத்திகளும் என்ற 03 சொத்து விடயங்களுக்குரிய மீதி உறுதிப்படுத்தல் சமர்பிக்கப்படாமையின் காரணமாக கணக்காய்வின் போது திருப்திகரமாக பரீட்சிப்பதற்கு முடியாதிருந்தது. | 2024 ஆம் ஆண்டின்போது நிதிக்கூற்றுக்களை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிக்கூற்றுக்களில் காணப்படுகின்ற கணக்கு மீதிகளை உறுதிப்படுத்துவதற்கு சான்றுகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

## 1.7 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை.**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை | | | |
| தாபன விதிக் கோவை XXIV அத்தியாயத் தின் 1.6 மற்றும் 4 ஆம் பிரிவு | ஓய்வுப் பெற்றுச் சென்ற, வேலை சேவையை விட்டுச் சென்ற மற்றும் மரணமடைந்த 18 உத்தியோகத்தர்களிடமிருந் து 1996 ஆம் ஆண்டு முதல் கொண்டு வரப்படுகின்ற ரூபா 61,651 ஆன கடன் மீதி அறிவடப்பட்டிருக்க வில்லை. | மிகவும் பழைய நிலுவை மீதியாக இருந்தமையால் தகவல்களை கண்டறிதல் வசதியீனமாக உள்ளது. | நிலுவைக் கடன் மீதி அறவிடப்படல் வேண்டும். |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| நிதிப் பிரமாணம் 571(1) | 02 வருடங்களை விஞ்சிய ரூபா 85,964 ஆன 27 வைப்புமீதிகள் ஓய்வு பெறச் செய்யப்படடிருக்கவில்லை. | வைப்புக்களை ஓய்வுப்றெச் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2002 பெப்ரவரி 25 ஆம் திகதியில் இலக்கம் 01/2002 என்ற அரச நிர்வாக சுற்றறிக்கை | 15 வாகனங்கள் தொடர்பாக வாகனங்களின் அரசாங்க இலச்சினை மற்றும் உள்ளுராட்சி நிறுவனத்தின் பெயர் பொறிக்கப்பட்டிருக்க வில்லை. | அரச இலச்சினை பொறிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | சகல வாகனங்களும் அரச இலச்சினை பொறிக்கப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 25,408,894 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 17,033,166 ஆகும்.

### 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

சபை செயலாளரால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கும், முன்னைய ஆண்டிற்கும் உரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானமான மூலம் | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | ஆதன வரியும் வரியும் | 2,100,000 | 2,182,919 | 1,252,537 | 930,382 | 1,950,000 | 2,024,551 | 1,486,337 | 538,214 |
| (ii) | வாடகை | 16,526,324 | 24,427,707 | 12,578,598 | 11,849,108 | 16,101,250 | 18,650,118 | 11,080,707 | 7,569,411 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணம் | 518,000 | 732,800 | 642,900 | 89,900 | 492,000 | 525,500 | 465,500 | 60,000 |
| (iv) | ஏனைய வருமானம் | 2,982,700 | 4,177,992 | 1,395,005 | 2,782,986 | 2,547,517 | 3,945,857 | 1,961,479 | 1,984,378 |
| | மொத்தம் | 22,127,024 | 31,521,418 | 15,869,040 | 15,652,376 | 21,090,767 | 25,146,026 | 14,994,023 | 10,152,003 |

### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரித்தலின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் டிசம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை | நிலுவை ஆதனவரி மீதியில் ரூபா 120,798 | நிலுவை வருமானம் |

| | | | |
|---|---|---|---|
| | ஆதன வரி ரூபா 871,597 அறவிடப்பட்டிருக்கவில்லை. | தொகை 2024.04.30 ஆம் வரையில் அறவிடப்பட்டுள்ளது. | தாமதமின்றி அறவிடப்படல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் டிசம்பர் 31 உள்ளவாறு அறவிட வேண்டிய வீட்டு வாடகை வருமானம் ரூபா 398,292 அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை வீட்டுவாடகை வருமானத்தில் 2024.04.30 ஆம் திகதி வரையில் ரூபா 38,250 அறவிடப்பட்டுள்ளது. | -மேற்படி- |
| (இ) | மீளாய்வாண்டின் டிசம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடவேண்டிய முச்சக்கரவண்டி கட்டண வருமானம் ரூபா 2,106,738 அறவிடப்பட்டிருக்கவில்லை. | முச்சக்கர வண்டிக் கட்டணம் நிலுவை வருமானத்தில் 2024.04.30 ஆம் திகதி வரையில் ரூபா 143,855 அறவிடப்பட்டுள்ளது. | நிலுவை வருமானம் தாமதமின்றி அறவிடப்படல் வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டின் டிசம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 581,237 மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 2,416,871 பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக்கட்டண நிலுவை மீதி அறவிடுவதற்காக உரிய நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு தொடர்ச்சியாக நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | -மேற்படி- |
| (உ) | **ஏனைய வருமானம்**<br>நகர சபைக்குரிய விருந்தினர் விடுதிகளை நடாத்திச் செல்வதற்காக நகர அபிவிருத்தி அதிகார சபையினால் கிடைக்க வேண்டிய 2007 ஆம் ஆண்டு முதல் நிலுவை வருமானம் ரூபா 4,049,018 அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை மீதியை பரீட்சித்து மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்படும். | -மேற்படி- |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தினால் கையளிக்கப்பட்ட பணிகளை நிறைவேற்றுதல்

நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 4 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நகர சபையினால் மாதாந்தம் சேகரிக்கப்படுகின்ற 24 தொன் அளவிலான கழிவுப் பொருட்கள் கழிவுப் பொருள் முகாமைத்துவ நிலையத்திற்கு அருகில் உள்ள சுற்றாடலில் போடப்பட்டிருந்தது. | கழிவுப் பொருள் முகாமைத்துவ நிலையத்தை முறைமைப் படுத்துவதற்கு விசேட வேலைத்திட்டமொன்று அமுல்படுத்துவதற்கு நகர சபை கருதி உள்ளது. | முறையாக கழிவுப்பொருள் முகாமைத்துவ வேலைத்திட்டம் அமுல்படுத்தப்படல் வேண்டும். |

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 1998 முதல் 2015 வரையான கால எல்லையில் 12 சந்தர்ப்பங்களின் போது முற்பணமாக செலுத்தப்பட்ட ரூபா 157,277 தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | பழைய நிலுவை மீதியாக இருந்ததுடன் தகவல்களை கண்டறிதல் வசதியீனமாக காணப்படுகின்றது. | முற்பணம் தீர்த்து வைக்கப்படல் வேண்டும். |

**3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2007 ஆம் ஆண்டின் பின்னர் ஆதனவரி மதிப்பீடு ஒன்று காலரீதியில் மேற்கொண்டு அறவிடப்பட்டிருக்கவில்லை. | புதிய ஆதனவரி மதிப்பீடு பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | கால ரீதியில் ஆதனவரியை மதிப்பிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2014 ஆம் ஆண்டின் போது மாகாண சபைகள் மற்றும் உள்ளுராட்சி அமைச்சினால் நகர சபைக்கு கையளிக்கப்பட்ட கம்பெக்டர் மீளாய்வாண்டின் வரையும் பயனற்று காணப்பட்டது. | உரிய கம்பெக்டர் வண்டியை விற்று தீர்ப்பதற்காக நிதி முகாமைத்துவ அலுவலகத்திற்கு கையளிக்கப்பட்டுள்ளது. | சொத்துக்களை ஆக்கபூர்வமாக பயன்படுத்துதல் வேண்டும். |
| (ஆ) | கடந்த ஆண்டில் பொருள் மெய்மையாய்வு அறிக்கை மூலம் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரையின்படி Dell கணனி, ஜீஐ குழாய், புல்வெட்டும் இயந்திரம், அலுமினியம் ஏணி மற்றும் மேலும் அலுவலக உபகரணங்களில் 48 அலகுகளின் பற்றாக்குறை தொடர்பாக பரிசோதனை மேற்கொண்டு பற்றாக்குறைக்கான காரணம் இனங்காணப்பட்டிருக்க வில்லை. | பற்றாக்குறையான பொருட்கள் தொடர்பாக பரீட்சிக்கும்போது ஆவணங்கள் நாளது வரையாக்கப்படாமை மற்றும் உரிய பொருள்கள் பரிசோதனை சபைக்கு காண்பித்தலிலுள்ள பிரச்சினைகள் அவதானிக்கப்பட்டமையால் அந்தப் பொருட்கள் தொடர்பாக குழுவொன்று ஊடாக மீண்டும் பரிசோதனை செய்த பின்னர் மிகுதி நடவடிக்கைகளை எடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |